விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 294 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 23 வியாழக்கிழமை (09.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## வடக்கு - கிழக்கு அபிவிருத்தி சமகால அரசியல் தொடர்பில்

### இந்திய உயர்ஸ்தானிகர் – சுமந்திரன் கலந்துரையாடல்



(கொழும்பு)

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி சமகால அரசியல் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இலங்கைத் 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேசத்திடம் சாட்சியமளிப்பேன்

### ஜெனிவாவில் சிறீதரன் எம்.பி



(ஜெனிவா)

சர்வதேசத்தின் தலையீட்டோடு இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக விசாரணை இடம்பெறுமாக இருந்தால் அதில் முன்னின்று சாட்சியம் வழங்கத் தயார் என பாராளுமன்ற உறுப் 15ஆம் பக்கம் பார்க்க

## காணாமல்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை கையாள்வதில் முன்னேற்றங்கள் இல்லை

### இலங்கை தொடர்பில் ஐ.நா குழு கவலை



(ஜெனிவா)

வலிந்து காணாமல்போனோர் தொடர்பான முறைப்பாடுகளைக் கையாள்வதில் இலங்கையில் முன்னேற்றம் இல்லை என ஐக்கிய நாடுகள் சபையின் குழு கவலை வெளியிட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியியற் கல்லூரிகளிலேயே பட்டம் பெறும் நிலையை உருவாக்குவதே இலக்கு

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளிலேயே பட்டம் பெறும் நிலையை உருவாக்குவதே அரசாங்கத்தின் இலக்கு என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரும் பிரத 15ஆம் பக்கம் பார்க்க

## புலி ஆதரவாளர்களை மகிழ்வித்த அநுர அரசு

### சபையில் நாமல் ஆவேசம்

(கொழும்பு)

விடுதலைப் புலி ஆதரவாளர்களை அநுர அரசாங்கம் மகிழ்வித்துள்ளதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித் 02ஆம் பக்கம் பார்க்க

## புன்னாலைக்கட்டுவனில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனில் மோட்டார் சைக்கிள் - ஹன்டர் வாகனம் மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் நாயன்மார் வீதி, நல்லூரைச் சேர்ந்த வேலன் கனகலிங்கம் (வயது-69) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (05) மாலை மேற்படி குடும்பஸ்தரும் மனைவியும் வசா 15ஆம் பக்கம் பார்க்க

## அரியாலையில் திண்மக் கழிவுகளை சேகரிக்கும் நிலையம் அமைக்க எதிர்ப்பு



(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச சபையினால் அரியாலையில் திண்மக் கழிவுகளை சேகரிக்கும் நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரியாலை கிழக்குப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை 15ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை தெளிவற்றுக் காணப்படுகின்றது

### கலாநிதி தயான் ஜயதிலக்க



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவு கொள்கை தொடர்பில் தெளிவற்ற நிலை காணப்படுவதாக முன்னாள் சிரேஷ்ட ராஜதந் 04ஆம் பக்கம் பார்க்க


## நாட்டில் 10 சதவீதத்தினர் மனநோயால் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் மக்கள் தொகையில் 10 சதவீதத்தினர் பல்வேறு மனநோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## வரி முறைமை தொடர்பில் ஐரோப்பிய பிரதிநிதிகளுடன் சஜித் கலந்துரையாடல்



02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAVEENS EMC
## KARAVEDDY
### Grade 06 - ADMISSION EXAM - 2026 RESULTS

| No | Name of the Student | Male / Female | Admission Exam - Gr 06 Maths | English | Total | Rank | Scholarship Marks | School |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | S.Aaharshya | F | 81 | 75 | 156 | 1 | 174 | J/Nelliady M.M.T.M.S |
| 2 | K.Krishika | F | 72 | 76 | 148 | 2 | 157 | J/Melaipuloly Siva. Vid |
| 3 | K.Yukeshan | M | 74 | 73 | 147 | 3 | 155 | J/Kasinathar Vid |
| 4 | G.Abitha | F | 74 | 70 | 144 | 4 | 171 | J/Manikkavasagar Vid |
| 5 | S.Anuvarsha | F | 69 | 68 | 137 | 5 | 160 | J/Manikkavasagar Vid |
| 6 | S.Akshaja | F | 72 | 63 | 135 | 6 | 152 | J/Manikkavasagar Vid |
| 7 | R.Aarukshi | F | 59 | 75 | 134 | 7 | 138 | J/Nelliady M.M.T.M.S |
| 8 | S.Asvine | F | 63 | 70 | 133 | 8 | 152 | J/Nelliady M.M.T.M.S |
| 9 | A.Bhomiraanhani | F | 64 | 69 | 133 | 8 | 149 | J/Kasinathar Vid |
| 10 | U.Shayle | F | 71 | 59 | 130 | 10 | 135 | J/Nelliady M.M.T.M.S |
| 11 | M.Raagavi | F | 69 | 60 | 129 | 11 | 150 | J/Kasinathar Vid |
| 12 | K.Thiksha | F | 35 | 78 | 113 | 12 | 142 | J/Nelliady M.M.T.M.S |
| 13 | R.Tharunihaa | F | 58 | 50 | 108 | 13 | 135 | J/Manikkavasagar Vid |
| 14 | S.Asvikan | M | 44 | 56 | 100 | 14 | 150 | J/Manikkavasagar Vid |
| 15 | R.Ashwini | F | 63 | 36 | 99 | 15 | 132 | J/Manikkavasagar Vid |
| 16 | B.Sankeerththany | F | 67 | 29 | 96 | 16 | 138 | J/Vada Hindu Primary.S |
| 17 | S.Mithushan | M | 25 | 35 | 60 | 17 | 139 | J/Manikkavasagar Vid |

◆ Final Selection of Students will be confirmed after the parents meeting that Today on 09.10.2025 (Thursday - 4.00pm)

Director
P.Easwaranathan

(C-4062)


## ஐரோப்பிய...

அரசாங்கம் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை (SVAT) இடைநிறுத்த எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழுவுடனான சந்திப்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ ஆகியோருக்கிடையில் நேற்று புதன்கிழமை (08) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

போட்டி விதிமுறைகளுக்கு இணங்குதல், தற்போதைய அரசாங்கம் இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி முறைமையை இடைநிறுத்த எடுத்து வரும் நடவடிக்கைகள், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மையாளர்கள் எதிர்கொள்ளும் பல சவால்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இங்கு பிரத்தியேக சிநேகபூர்வ கலந்துரையாடலுக்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கார்மென் மொரேனோ மற்றும் கலாநிதி ஹெஸ்ஸுடன் இணைந்து நுண், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாண்மை துறையைச் சேர்ந்த வணிக முயற்சித் தலைவர்களுடனான சந்திப்பிலும் கலந்து கொண்டார். (ம-7)

## புலி...

தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்போது அரசாங்கம் வாக்களிப்பைக் கோரவில்லை என்று நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் வாக்கெடுப்பைக் கோருவதற்கு அரசாங்கத்திற்கு முதுகெலும்பு இல்லையா? நாடுகள் பல இலங்கைக்கு ஆதரவாக உள்ளன.

எனினும், டயஸ்போராக்களையா? விடுதலைப் புலி ஆதரவாளர்களையா? மகிழ்விக்கப் போகின்றீர்கள் என நாமல் ராஜபக்ஷ கேள்வியெழுப்பினார். (ம-7)


**MUNICIPAL COUNCIL, JAFFNA**
**Procurement of Goods & Services for Jaffna Public Library – Library Digitalization Project**
**MODIFICATIONS AND ADDENDA IN BID DOCUMENT**

The period for issuing of tender documents for all the works under the Provincial Special grant Fund Works-2025 advertised through newspaper advertisement on 26.09.2025 has been extended up to 16.10.2025 at 2.00 PM. Closing date for submission of tenders and the date of opening of tenders has been extended up to 17.10.2025 at 11.00 A.M Further addenda and modifications made to the tender document have been sent to all suppliers who have received tender documents.


Chairman,
Regional Procurement Committee,
Municipal Council, Jaffna

09-10-2025

(C-4064)



# மரண அறிவித்தல்



மலர்வு
1953.06.24

உதிர்வு
2025.10.07

## வேலுப்பிள்ளை
## கணேசலிங்கம் (செல்லக்கிளி)

இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணேசலிங்கம் அவர்கள் கடந்த (07.10.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - காந்திமதி தம்பதியினரின் அன்பு மகனும் முத்துச்சாமி - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கௌசலாவின் அன்புக் கணவரும் சோபிதா, ரூபிதா, நிறஞ்சிதா(அமரர்), நிஷாந்தா, சுலக்ஷனன், சுகந்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிரிசன், பிரீதிகா, அனிஷ், ஆதிஷ், கிருத்திஷ், ஆரதிஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சந்தைவீதி,
உடுப்பிட்டி.


தகவல்:
குடும்பத்தினர்

(C-4066)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான அழுத்தங்கள் படிப்படியாக குறைவடையும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு நம்பிக்கை



(கொழும்பு)

**மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை மீதான சர்வதேசத்தின் வெளியக அழுத்தங்கள் படிப்படியாகக் குறைவடையும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

பிரித்தானியா தலைமையில் இலங்கை தொடர்பான முக்கிய நாடுகளால் "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பில் புதிய பிரேரணை வாக்கெடுப்பு இன்றி நிறை வேற்றப்பட்டுள்ளமை குறித்து கருத்து தெரிவிக்கும் போது, அந்த ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் புஞ்சி ஹேவா இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், சர்வதேச சமூகங்கள் உணரக்கூடிய மற்றும் திருப்தியடையக்கூடிய நடவடிக்கைகளை சீராக முன்னெடுத்தால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் புதிய தீர் மானம் நிறைவேற்றப்படல் போன்ற அழுத்தங்கள் குறையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் சார்ந்த கரிசனைகளுக்குத் தீர்வுகாணுமாறு கடந்த காலங்களில் பல்வேறு நாடுகள் வலியுறுத்தி வந்தன.

அதனை முன்னிறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

குறித்த தீர்மானங்களுடன் ஒப்பிடுகையில் இந்த முறை நிறை வேற்றப்பட்டிருக்கும் தீர்மானம் மிகப்பாரதூரமானது அல்ல எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேபோன்று இந்தப் புதிய தீர்மானத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்குத் தீர்வுகாணல், காணி விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரங்கள் குறித்துத் தீர்வு காண்பதற்காக கடந்த காலங்களில் பல்வேறு ஆணைக் குழுக்கள் நிறுவப்பட்டிருந்தாலும், அவற்றின் ஊடாக வழங்கப்பட்ட பரிந்துரைகள் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## கையிருப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடும்போது செப்ரெம்பர் மாதத்தில் 1.1% அதிகரித்துள்ளன.

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 6.17 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகி இருந்த நிலையில், செப்ரெம்பர் மாதத்தில் 6.24 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளன. (நி)

## வங்கி அட்டை மூலம் பேருந்து கட்டணங்கள்

(கொழும்பு)

வங்கி அட்டைகளைப் பயன்படுத்தி பயணிகள் பேருந்து கட்டணங்களைச் செலுத்துவதை அனுமதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, பயணச்சீட்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட பேருந்துகளில் இவ்வாறு கட்டணம் செலுத்தும் முறை அனுமதிக்கப்படவுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று பாராளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (நி)

## பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ள கிராம உத்தியோகத்தர் சங்கம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் நாட்களில் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

குறைக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவை மீள வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட உள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த போதே அந்த சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் பாதீட்டுத் திட்டத்தில் தங்களுக்கான அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வினை முன்வைக்குமாறும் அவர் கோரியுள்ளார். (நி)

## இணையவழி நிதிமோசடி தினமும் பதிவாகும் முறைப்பாடுகள்!

### எச்சரிக்கை விடுக்கும் பொலிஸார்

(கொழும்பு)

இணையவழி நிதி மோசடிகளுக்கு எதிராக பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். டெலிகிராம், வாட்ஸ்அப் உள் ளிட்ட சமூக ஊடகக் குழுக்கள் மூலம் இம்மோசடிகள் நடைபெறுவதாகவும், தினமும் முறைப்பாடுகள் பதிவாவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே, சமூக ஊடகக் கணக்குகள் மூலம் பல்வேறு வருமான ஆதாரங்களை வழங்குவதாகக் கூறி அடையாளம் தெரியாத நபர்கள் மற்றும் சமூக ஊடகக் குழுக்கள் செய்யும் மோசடி தூண்டுதல்களுக்கு ஏமாற வேண்டாம் என்று பொலிஸார் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதேபோல், கணக்கு இலக்கங்கள் மற்றும் கடவுச்சொற்கள் போன்ற இரகசியத் தகவல்களை வெளியாட்களுக்கு வழங்குவதைத் தவிர்க்குமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (நி)



### இழப்பீட்டு அலுவலகத்தின்

## முன்னாள் பதில் பணிப்பாளர் நாயகம் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது

(கொழும்பு)

மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான காணி தொடர்பான சந்தேகத்திற்கிடமான இழப்பீட்டு மோசடி தொடர்பாக, இழப்பீட்டு அலுவலகத்தின் முன்னாள் பதில் பணிப்பாளர் நாயகம், இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவின் கூற்றுப்படி, குற்றம் சாட்டப்பட்டவர் தற்போது நீதி அமைச்சின் மேலதிக செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

2022 ஆம் ஆண்டு 'அரகலய' போராட்டத்தின் போது சேதமடைந்த மகாவலி அதிகாரசபை சொத்துக்கான இழப்பீட்டுச் செயற்பாட்டின் போது, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவுடன் சதி செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சஷீந்திர ராஜபக்ஷவுக்கு எதிரான இலஞ்ச ஊழல் விசாரணையில் இரண்டாவது சந்தேக நபராக இந்த அதிகாரி அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் முன்னாள் பதில் பணிப்பாளர் ஜெனரலாக அவர் பணியாற்றிய காலத்தில், அரச சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தி, ரூ.885,000 இழப்பீட்டுத் தொகையை அங்கீகரிக்குமாறு அரசாங்க அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவுடன் இவரது கைது தொடர்புடையது.

கைதான சந்தேக நபரை கொழும்பு தலைமை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (நி)

## சாரதி அனுமதிப்பத்திரங்களில் பாரிய மோசடி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

2 தசாப்தங்களுக்கு மேல் ஒரே தனியார் நிறுவனத்தின் மூலம் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதில் பெரும் மோசடி ஏற்பட்டுள்ளதாகக் கப்பல் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்னாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒரே நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் மூலம் பாரிய அளவில் நிதி வீணடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தனியார் நிறுவனத்தால் ஒரு சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சிடுவதற்கான செலவு ரூபாய் 534.54 ஆக இருந்த நிலையில், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் அதே வேலையை வெறும் ரூபாய் 367 செலவில் செய்ய முடியும் என அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இதனையடுத்து, சாரதி அனுமதிப்பத்திரங்களை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமே அச்சிட வேண்டும் என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் வெளிப்படுத்தினார்.

இதற்காக அச்சிடும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுவருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சத்தமில்லாமல் சாதனை படைத்த எம்.எஸ் தோனி



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மகேந்திரசிங் தோனி அதிகார பூர்வமாக ட்ரோன் பைலட் உரிமம் பெற்றுள் ளார். ட்ரோன் பைலட் உரிமத்தை அதிகாரபூர்வமாக பெற்றதாக சமூக வலைதள பக்கத்தில் தோனி அறிவித்தார்.

சென்னையிலுள்ள கருடா ஏரோஸ்பேஸ் என்ற சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ரிமோட் பைலட் பயிற்சி நிறுவனத்தில் தோனி பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளார். அவர் இந்த நிறுவனத்தில் முதலீட்டாளர் மற்றும் பிராண்ட் அம்பாசிடரும் ஆவார். இந்தியாவின் முன்னணி டிரோன் உற்பத்தியாளர்களில் ஒன்றான கருடா ஏரோஸ்பேஸ், அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்களின் மேற்பார்வையின் கீழ் 2,500 இற்கும் மேற்பட்ட விமானிகளுக்கு பயிற்சி அளித்துள்ளது. அதில் பங்கேற்று முறையான பயிற்சி பெற்ற தோனி ட்ரோன் பைலட் உரிமத்தை அதிகாரபூர்வமாக பெற்றுள்ளார். (3)

### ஐ.சி.சி தரவரிசை

## முதலிடத்தில் நீடிக்கும் ஸ்மிருதி மந்தனா



ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீராங்கனைகளுக்கான தரவரிசை பட்டியலை ஐ.சி.சி. நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா 791 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார்.

சமீபத்தில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் தொடர்ச்சியாக சதங்களை விளாசினார்.

இங்கிலாந்தின் நாட் சீவர்-புருண்ட் 731 புள்ளியுடன் 2ஆவது இடத்தில் உள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பெத் மூனி 713 புள்ளியுடன் 3ஆவது இடத்திலும், தென் ஆபிரிக்காவின் தஸ்மின் பிரிட்ஸ் 4ஆவது இடத்திலும் உள்ளனர்.

அத்துடன் பந்துவீச்சு வீராங்கனைகளுக்கான தரவரிசையில் இந்தியாவின் தீப்தி சர்மா ஒரு இடம் முன்னேறி 6ஆவது இடத்தில் நீடிக்கிறார். இந்திய அணி சார்பில் முதல் 10 இற்குள் இடம் பிடித்தவர் இவர் மட்டுமேயாவார். (3)

### மகளிர் உலகக் கிண்ணம்

## புள்ளிப்பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறிய இங்கிலாந்து




2025 ஆம் ஆண்டுக்கான மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 8 ஆவது போட்டியில் இங்கிலாந்து மகளிர் அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

குறித்த போட்டியில் இங்கிலாந்து மற்றும் பங்களாதேஷ் மகளிர் அணிகள் மோதின. போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து மகளிர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் மகளிர் அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தநிலையில் 179 எனும் வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து மகளிர் அணி 46.1 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

இதன்படி குறித்த போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான புள்ளிப்பட்டியலில் இங்கிலாந்து அணி முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

இதுவரை 2 போட்டிகளில் விளையாடியுள்ள இங்கிலாந்து மகளிர் அணி 2 போட்டிகளிலும் வெற்றி பெற்று 4 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இதனையடுத்து 4 புள்ளிகளுடன் இந்திய மகளிர் அணி இரண்டாமிடத்தில் உள்ளதுடன், அவுஸ்திரேலிய மகளிர் அணி 3 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் உள்ளது. (3)

### வெளியுறவுக்...

திரி கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு பாதகமாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைத் தர்க்க ரீதியாக நிராகரித்த விடயம் குறித்து ஜெனிவாவிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியைப் பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தர்க்கரீதியாக நிராகரிக்கப்பட்டாலும் இந்தத் தீர்மானம் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கயை ஏன் இலங்கை முன்வைக்கத் தவறியது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை வாக்கெடுப்புக் கோராத காரணத்தினால் இலங்கை குறித்த தீர்மானம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டமை மிகவும் வருந்தத்தக்க விடயம் என அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனக் கோரியிருந்தால் இலங்கைக்கு ஆதரவான சில நாடுகள் குரல் கொடுத்திருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்கெடுப்பின்றி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்பிலான நன்மதிப்பை குறைவடையச் செய்யும் என அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

இது பாதகமான நிலை எனவும் இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை என்ன என்பது தமக்குப் புரியவில்லை எனவும் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஐந்தாவது இளங் கலைமாணி ஆய்வு மாநாடு நேற்று புதன்கிழமை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்து கொண்டார்.

(படம்-சிவசாந்தன்)

# ஆதனவரிப் பிரச்சினைகளுக்கு தீர்வு

## தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவிப்பு

(தருமபுரம்)

ஆதன வரி தொடர்பாக காணப்படும் பிரச்சனைகளை தீர்த்துக்கொண்டு புதிய வட்டாரங்களுக்கும் ஆதன வரி அறவிடப்படவுள்ளதாக கரைச்சி பிரதேச சபைத்தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், ஆதன வரி தொடர்பாக மக்கள் பல்வேறு முறைப்பாடுகளை தெரிவித்துள்ள நிலையில் அவற்றினை மீள் பரிசீலனை செய்யும் நோக்குடன் இன்று முதல் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் வரவுள்ளனர்.

அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி உங்கள் பிரச்சினைகளை தீர்த்து கொள்ள முடியும். அத்துடன் புதிதாக பரந்தன் வட்டாரத்திற்கான ஆதன வரிக்கான மதிப்பீடு செய்யப்பட்டு ஆதன வரி அறவீடு செய்யும் பணியும் முன்னெடுக்கப்படவுள்ளது. இதேவேளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராமரிப்பு இன்றி காணப்படும் காணிகள் கரைச்சி பிரதேச சபையினால் துப்பரவு செய்யப்பட்டு பராமரிக்கப்படவுள்ளது.

மேலும் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் வட்டார ரீதியாக பெண் நாய்களுக்கு கருத்தடை சிகிச்சையும் மேற்கொள்ளப்படவுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-316)


# சேவைநலன் பாராட்டு



திருமதி. மகாலஷ்மி ஜெயநாதன்

(பாமா) சங்கீத பாட ஆசிரியர்

Best Wishes

1990.10.10 முதல் நியமனம்

இணுவில் மத்திய கல்லூரி

17.01.2014 – 2025.10.09

சேவை விபரம்

- யா/நாகேஸ்வரி வித்தியாசாலை – 10.10.1990– 06.10.1992
- யா/ ஸ்ரீ முருகன் வித்தியாலயம் – 07.10.1992– 31.12.1995
- வ/வவுனியா முஸ்லீம் ம.வித்தியாலயம் – 01.01.1996– 26.04.1997
- யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் – 27.04.1997– 28.02.2000
- யா/மல்லாகம் மகாவித்தியாலயம் – 01.03.2000 – 31.08.2004
- யா/மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் – 01.09.2004– 31.12.2004
- யா/இராமநாதன் கல்லூரி – 01.01.2005–.09.02.2005
- யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி – 10.02.2005– 30.06.2005
- யா/இராமநாதன் கல்லூரி – 01.07.2005– 16.01.2014
- யா/இணுவில் மத்திய கல்லூரி – 17.01.2014 – 09.10.2025

(5611)

ஆசிரியப் பணியில் முப்பத்தைந்து ஆண்டுகள் சங்கீத பாட ஆசிரியராகவும் பகுதித் தலைவர் ஆகவும் சேவையாற்றி இளைப்பாறும் அவர் தம் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்–

அதிபர், ஆசிரியர்கள் கல்வி சாரா ஊழியர் நலன் புரிச்சங்கம்

யா/ இணுவில் மத்திய கல்லூரி.


SLIC Sri Lanka Insurance LIFE

# சிறுவர் தினத்தில் பிறந்த பிள்ளைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் விசேட காப்பீடு

2025 உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடும் விதமாக, இலங்கை காப்பீட்டு - ஆயுள் (SLIC life) நாடு முழுவதும் ஒக்டோபர் 1 ஆம் திகதி பிறந்த ஒவ்வொரு குழந்தையின் பெற்றோருக்கும் தலா 1 மில்லியன் ரூபா பெறுமதியான இலவச ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.இது தொடர்ந்து நான்காவது ஆண்டாக ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் குழுமத்தினரால் மேற்கொண்டு வருகின்றது. என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமின்றி, நாடு முழுவதும் உள்ள பெற்றோர்கள் இந்த தனித்துவமான சலுகையிலிருந்து பயனடைவதை உறுதி செய்வதற்காகவே இலங்கையில் உள்ள ஒவ்வொரு மருத்துவமனையையும் இத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி, முக்கியமான தருணங்களில் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் அவர்களுடைய நிதிப் பாதுகாப்பை வழங்குவதற்கான ஒரு நோக்கமாகவும், குடும்பங்களின் எதிர் காலத்திற்கான நிலையான அடித்தளத்தை அமைக்கும் நோக்கமாகவும் SLIC லைஃப் இன் இத்திட்டம் பிரதிபலிக்கிறது. அதே நேரத்தில் ஆயுள் காப்பீட்டின் மதிப்பை ஒரு பாதுகாப்பு வலையாக இது வலுப்படுத்துகிறது.இந்த முயற்சியைக் கொண்டாடும் வகையில், 2025 ஒக்டோபர் 1 ஆம் திகதி கொழும்பில் உள்ள காசல் ஸ்ட்ரீட் மகளிர் மருத்துவமனையில் சிறப்பு நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இதில் SLIC லைஃப் பிரதிநிதிகள் மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் குடும்பங்களும் இணைந்து இந்த மைல்கல்லைக் கொண்டாடினர். குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு பிரகாசமான எதிர்காலத்தைப் பாதுகாப்பதில் ஆயுள் காப்பீட்டின் முக்கியத்துவத்தை இந்த நிகழ்வு வலியுறுத்தியது.


குழந்தைகள் மற்றும் கல்விக்கான SLIC லைஃப்பின் அர்ப்பணிப்பு அதன் CSR உத்தியில் ஆழமாகப் பதிந்துள்ளது. சமீபத்தில், கல்வி மற்றும் சமூக நலனுக்கான அதன் நீடித்த பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில், இலங்கை தலைமைத்துவ விருதுகளில் நிறுவனம் சிறந்த CSR விருதைப் பெற்றது. 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட "பசல் பிரியத சுரகிமு" என்ற முதன்மை முயற்சி, வகுப்பறை புதுப்பித்தல், நீர் வசதிகள், நூலகங்கள் மற்றும் கற்றல் வளங்களுடன் 3,365 இற்கும் மேற் பட்ட பின்தங்கிய பள்ளிகளுக்கு பயனளித்துள்ளது. மே 2025 இல் மட்டும், SLIC லைஃப் ஒரே நேரத்தில் 100 பள்ளிகளை புத்துயிர் பெற வைத்தது. கல்விக்கான அதன் பெரிய அளவிலான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது. இந்த முயற்சியை நிறைவு செய்யும் வகையில், "சுப பத்தும் உதவித்தொகை திட்டம்", 2014 முதல், தேசிய தேர்வுகளில் சிறந்து விளங்கும் குழந்தைகளுக்கு ரூ. 240 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள 2,200இற்கும் மேற்பட்ட உதவித் தொகைகளை வழங்கியுள்ளது, இதில் 2025 இல் 225 உதவித் தொகைகளும் அடங்கும்.





வர்த்தக உலகம்

நாட்டின் எதிர்காலத்தின் அடித்தளம் குழந்தைகள் என்பதை SLIC லைஃப் அங்கீகரிக்கிறது. உலக குழந்தைகள் சிறுவர் தினத்தன்று பிறந்த குழந்தைகளின் பெற்றோருக்கு ரூ. 1 மில்லியன் இலவச ஆயுள் காப்பீட்டை வழங்குவதன் மூலம், காப்பீடு, வாழ்க்கைப் பயணம் முழுவதும் எவ்வாறு அத்தியாவசியப் பாதுகாப்பை வழங்குகிறது என்பதை SLIC நிறுவனம் நிரூபிக்கிறது.

இந்தத் திட்டம் மற்றும் பிற முயற்சிகள் மூலம், குடும்பங்களுக்கு நிதிப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் வகையில், SLIC லைஃப் துறைக்கு ஒரு அளவுகோலை அமைத்துள்ளது. குழந்தைகளை அதன் நோக்கத்தின் மையமாகக் கொண்டு, அனைத்து இலங்கையர்களுக்கும் பிரகாசமான, மிகவும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதில் நிறுவனம் உறுதியாக உள்ளது.







பிரதேசஅபிவிருத்தி வங்கியின் கொக்கட்டிச் சோலை கிளை, கடந்த 3 ஆம் திகதி சர்வதேச சிறுவர் தினத்தைக் குறிக்கும் வகையில் பாலர் பள்ளிகளிடையே பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் பாலர் பள்ளி மாணவர்களின் சுற்றுச்சூழலிலிருந்து மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை சேகரித்து அதனை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தில் குழந்தைகளின் வங்கி கணக்குகளை ஆரம்பிக்கும் திட்டம் முக்கிய அம்சமாக இருந்தது. இதில் மரம் நடும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்-(வ-து)

# பதவி வெற்றிடம்

பதிவு இல: J/1596 பதிவுத்திகதி -11.03.1972

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி - பொதுமுகாமையாளர்
**சம்பள குறியீட்டு இல** -101/07
**சம்பள அளவுத்திட்டம்** -36125-700*10-760*10-920*10-59925 (02/ 2025(1))
சுற்றுநிருபப்படி
**வெற்றிட எண்ணிக்கை** - 01
**தகைமைகள்** - (01/2021 இன்படி)

அ. கூட்டுறவு ஊழியர் 8 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 9ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமைநிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப்பட்டம்/ அதற்குச் சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளி விபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./ இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த.உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

**பதவி**- உள்ளகக் கணக்காய்வாளர்
**சம்பள குறியீட்டு இல** - 105/10
**சம்பள அளவுத்திட்டம்** -34745-610*10-670*10-830*10-55845(02/2025(1))
சுற்றுநிருபப்படி
**வெற்றிட எண்ணிக்கை** -01
**தகைமைகள்** - (01/2021 இன்படி)

அ. கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்ட பதவியில் முகாமை/ மேற்பார்வை நிலைப்பகுதியில்/ நிறைவேற்றாளர் நிலைப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 12ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை/ மேற்பார்வை நிலைப்பதவியில்/ நிறைவேற்றாளர் நிலைப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்குச் சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை தொடர்பாக ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்./ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை தொடர்பாக ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**பதவி** - உற்பத்தி முகாமையாளர்
**சம்பள குறியீட்டு இல** -107/ 10
**சம்பள அளவுத்திட்டம்** -34745-610*10-670*10-830*10-55845(02/2025(1))
சுற்றுநிருபப்படி
**வெற்றிட எண்ணிக்கை** -01
**தகைமைகள்** - (01/2021 இன்படி)

அ. கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்ட பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்ட பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும்/ பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை/ மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

இ. க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும்/ பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்

பதவி - கிராமிய வங்கி முகாமையாளர்
**சம்பள குறியீட்டு இல** - 205/12
**சம்பள அளவுத்திட்டம்** -33820-550*10-610*10-770*10-53120(02/2025(1))
சுற்றுநிருபப்படி
**வெற்றிட எண்ணிக்கை** - 01
**தகைமைகள்** - (01/2021 இன்படி)

அ. கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் நிதிச்செயற்பாட்டுடன் தொடர்புடைய கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழிலில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**பதவி** - கிளை மேற்பார்வையாளர்
**சம்பள குறியீட்டு இல** - 207/12
**சம்பள அளவுத்திட்டம்** -33820-550*10-610*10-770*10-53120(02/2025(1))
சுற்றுநிருபப்படி
**வெற்றிட எண்ணிக்கை** - 01
**தகைமைகள்** - (01/2021 இன்படி)

அ. கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்ட பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர்/ கொள்வனவு உத்தியோகத்தர்/ கிளை மேற்பார்வையாளர்/ கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/

க.பொ.த. உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்./ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழிலில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தி/ இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி உட்பட 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

பதவி - களஞ்சிய முகாமையாளர்
**சம்பள குறியீட்டு இல** - 208/13
**சம்பள அளவுத்திட்டம்** -33360-520*10-580*10-740*10-51760(02/2025(1))
சுற்றுநிருபப்படி
**வெற்றிட எண்ணிக்கை** - 01
**தகைமைகள்** - (01/2021 இன்படி)

அ. கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்ட பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்./

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த.சாதாரணதரப்பத்திர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி உட்பட 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

பதவி - எழுதுனர்
**சம்பள குறியீட்டு இல** - 302/13
**சம்பள அளவுத்திட்டம்** -33360-520*10-580*10-740*10-51760(02/2025(1))
சுற்றுநிருபப்படி
**வெற்றிட எண்ணிக்கை** -01
**தகைமைகள்** - (01/2021 இன்படி)

அ. கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் எழுதுனர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் எழுதுனர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. / க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

பதவி - எழுதுனர்
**சம்பள குறியீட்டு இல** - 302/14
**சம்பள அளவுத்திட்டம்** -32900-490*10-550*10-710*10-50400(02/2025(1))
சுற்றுநிருபப்படி
**வெற்றிட எண்ணிக்கை** - 01
**தகைமைகள்** (01/2021 இன்படி)

அ. கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் எழுதுனர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் எழுதுனர்/ காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் /தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

(C-4058)

(07 ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(06 ஆம் பக்கம் தொடர்ச்சி)

**பதவி** - அலுவலக உதவியாளர்
**சம்பள குறியீட்டு இல** - 317/16
**சம்பள அளவுத்திட்டம்** -31975-390*10-490*10-650*10 -47275(02/2025(1)) சுற்றுநிருபப்படி
**வெற்றிட எண்ணிக்கை** -01
**தகைமைகள்** - (01/2021 இன்படி)

அ. கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்./ 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**பதவி** - உற்பத்தி தொழிலாளி
**சம்பள குறியீட்டு இல** - 318/17
**சம்பள அளவுத்திட்டம்** -31515-360*10-450*10- 500*10 -44615(02/2025(1)) சுற்றுநிருபப்படி
**வெற்றிட எண்ணிக்கை** -01
**தகைமைகள்** - (01/2021 இன்படி)

அ. 05ஆம் தரகல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** -

01. கூட்டுறவு பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாயின் 18-45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02. சங்கப்பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாக பூரணப்படுத்தப்படாததும், தகைமையற்றதும், இணைப்புக் களற்றதும், விண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
05. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்கள் (04/2017, 08/2008 (1) 23.12.2022) அமைய படிகள் வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்புதல்**

விண்ணப்பப் படிவத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பிறப்பு சான்றிதழ், கல்வி தகைமைச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் நற்சான்றிதழ், தொழில் தகைமைச் சான்றிதழ், தே.அ.அட்டை பிரதி ஏனைய தகைமைகள் இருப்பின் அச் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி விண்ணப்ப பெயர் குறிப்பிட்டு விண்ணப்பங்கள் 23.10.2025 ஆம் திகதிக்கு முன்னதாக **"தலைவர், ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை "**என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

❖ மேலதிக தொடர்புகளுக்கு -021 221 1677

**தலைவர்,**
**ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.(வ-து)**

# வாகன விற்பனைக்கான பகிரங்க மூடிய கூறுவிலை கோரல்

## ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**பதிவு இல.J/1596** **பதிவுத்திகதி -11.03.1972**

சங்கத்துக்கு சொந்தமான வாகனம் **TATA MOTOR LORRY - NPLH 4424** விற்பனை செய்யப்படவுள்ளது. இதற்கு பொருத்தமான கேள்விதாரர்களிடமிருந்து பகிரங்க மூடிய கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

வாகனத்தை கொள்வனவு செய்ய விரும்புவோர் அலுவலக நேரத்தில் சமூகமளித்து பார்வையிட முடியும்.

வாகனம் கொள்வனவு செய்ய விரும்புவோர் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை (முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், வாகனத்தின் இலக்கம், கொள்வனவு பெறுமதி என்பன உள்ளடங்கலாக) **தலைவர், ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம். ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை** என்னும் முகவரிக்கு **23.10.2025** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும். தபாலின் இடது பக்க மேல் மூலையில் **"வாகன விற்பனை"** என குறிப்பிடல் வேண்டும்.

**நிபந்தனைகள்:**

01. ஒவ்வொரு வாகனத்திற்கும் மீளளிக்க முடியாத வைப்பு பணமாக ரூபா 1000.00 ஐ காசாளர், ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம். அவர்களிடம் நேரடியாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று விண்ணப்பிக்க முடியும்.
02. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் குறித்த வாகனத்தின் விற்பனை செய்யப்படும் தொகையின் 10% அன்றைய தினம் செலுத்துவதுடன் மீதியினை 14 நாட்களுக்குள் செலுத்தி வாகனத்தினை அகற்றுதல் வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் யாவும் **23.10.2025 ஆம் திகதி காலை 11.00** மணிக்கு சங்க அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும் கேள்விதாரர்கள் சமூகமளிக்க முடியும்.
சங்க இயக்குனர் சபையின் முடிவே இறுதியானது.

**தலைவர்.**
**ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.**
**தொலைபேசி இலக்கம் - 021 221 1627**

(C-4057)

# பெறுகைகளுக்கான அறிவித்தல்
# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

**வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை - 2025/2026**

மேற்படி 02.10.2025 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பின்வரும் பெறுகை இலக்கங்களைக் கொண்ட நிலையங்களுக்குரிய கேள்வி உத்தரவாத முறியானது பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | மாற்றியமைக்கப்பட்ட கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01 | H/LS/2025-2026/01 | அழுக்கு துணிகள் சலவைச் சேவை | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை, பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித்துறை, மருதங்கேணி, அம்பன், கரவெட்டி, ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் பருத்தித்துறை, முள்ளியான் | 15,000.00 |
| 02 | H/LS/2025-2026/02 | | சத்திர சிகிச்சைக் கூடம் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 40,000.00 |
| 03 | H/LS/2025-2026/03 | | ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி, பிரதேச வைத்தியசாலை வரணி, கொடிகாமம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் கைதடி | 15,000.00 |
| 04 | H/LS/2025-2026/04 | | சத்திர சிகிச்சைக் கூடம் ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி | 30,000.00 |
| 05 | H/LS/2025-2026/06 | | ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை, பிரதேச வைத்தியசாலை அளவெட்டி, இளவாலை சுகாதார பராமரிப்பு நிலையங்கள் குரும்பசிட்டி, காங்கேசன்துறை | 25,000.00 |
| 06 | H/LS/2025-2026/07 | | சத்திர சிகிச்சைக் கூடம் ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை | 45,000.00 |

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்:** rdhsjaffna15@gmail .com

(C-4059)


# யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவரை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த திருமதி மல்லிகாதேவி லக்ஸ்மன் அவர்கள் 14.08.2025 அன்று பிற்பகல் 1.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவரது உறவினரால் அனுமதிக்கப்பட்டார்.

ஆனால் இந் நோயாளிக்கு உரிய சிகிச்சை செய்த போதும் உறவினர்கள் வராமையினால் இவரை வைத்தியசாலை விடுதியில் இருந்து வீட்டுக்கு அனுப்ப முடியாதுள்ளது.

எனவே இவரது குடும்ப உறுப்பினர்கள் இவரை உடனடியாகப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா அறிவித்துள்ளார். (8)



உலக அஞ்சல் தினைத்தை முன்னிட்டு காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

காங்கேசன்துறை தபால் நிலைய தபால் அதிபர் ரி. சித்துறூபா தலைமையில் நேற்று புதன்கிழமை காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற்ற இரத்ததான முகாமில் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர். (படம்:சிவசாந்தன்)

# யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையில் 'கட்டின புண்ணிய பூஜை'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரை வணக்கஸ்தலத்தில் வருடாந்தம் நடத்தி வருகின்ற கட்டின புண்ணிய பூஜையானது எதிர்வரும் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையில் நடத்தப்படவுள்ளது. இந்த புண்ணிய பூஜையானது யாழ்ப்பாண பாதுகாப்பு படை கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ரசிக குமார தலைமையில் நடைபெறவுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## புத்த மத விழாவில் குண்டுத் தாக்குதல்

- 24 பேர் உயிரிழப்பு
- மியன்மாரில் சோகம்



(மியன்மார்)

மத்திய மியன்மாரில் திருவிழா நிகழ்வொன்றில் ஆர்ப்பாட்டத்தின் போது பாராகிளைடர் மூலம் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதில் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 47 பேர் காயமடைந்துள்ளனர்.

தேசிய விடுமுறை நாளான கடந்த திங்கட்கிழமை மாலை புத்த மத தாடிங்யுட் திருவிழா நிகழ்வில் பங்கேற்க சாங்யூ நகரத்தில் சுமார் 100 பேர் கூடியிருந்தபோது, மோட்டார் மூலம் இயங்கும் பாராகிளைடர் ஒன்று கூட்டத்தின் மீது இரண்டு குண்டுகளை வீசியதாக இராணுவ ஆட்சிக்கு எதிரான மக்கள் பாதுகாப்புப் படையின் கீழ் உள்ள உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு இராணுவ ஆட்சிக் கொள்கைகளை எதிர்த்து மெழுகுவர்த்தி ஏந்தி நடத்தப்பட்ட போராட்டமாகவும் அமைந்தது.

2021ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பில் மியன்மார் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ளது.

இந்த மோதலில் 5,000 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா மதிப்பிட்டுள்ளது. (நி)

## பிரித்தானிய பிரதமர் இந்தியாவுக்கு விஜயம்

(டில்லி)

இரண்டு நாட்கள் அரசு முறைப் பயணமாக, பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.




இந்தியப் பிரதமர் மோடியின் அழைப்பின் பேரில், பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் நேற்று மும்பை விமான நிலையத்தை சென்றடைந்த நிலையில் அவரை முதல்வர் பட்னவிஸ், துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே உள்ளிட்டோர் வரவேற்றுள்ளனர்.

இது இந்தியாவிற்கு அவரது முதல் அதிகாரப் பூர்வ பயணம் ஆகும்.

இதன்போது, வர்த்தகம் மற்றும் முதலீடு, தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இந்திய பிரதமருடன் பிரித்தானிய பிரதமர் ஆலோசனை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இன்று மும்பையில், பிரதமர் மோடியும், பிரதமர் கெய்ர் ஸ்டார்மரும் தொழில்துறைத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

மேலும் இதன்போது இந்தியா - இங்கிலாந்து இடையே வர்த்தக ஒப்பந்தமும் கையெழுத்தாக வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## காசாவில் இடிபாடுகளை 10 ஆண்டுகள்

## ஐ.நா அறிக்கை

(ஜெனீவா) இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கி நேற்று முன்தினத்துடன் இரண்டு ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, பாலஸ்தீன நகரமான காசாவில் ஏற்பட்டுள்ள பேரழிவை மதிப்பீடு செய்து ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.





அறிக்கையின்படி, இஸ்ரேலியத் தாக்குதல்களால் காசாவின் 80% கட்டடங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன.

கட்டட இடிபாடுகள் உள்ளிட்ட 51 மில்லியன் தொன் குப்பைகள் குவிந்துள்ளன.

போரினால் ஏற்பட்ட இடிபாடுகளை முழுமையாக அகற்ற 10 ஆண்டுகள் ஆகலாம்.

மேலும், காசாவின் வளமான நிலப்பரப்பை மீட்டெடுக்க 25 ஆண்டுகள் வரை ஆகலாம்.

இஸ்ரேலியத் தாக்குதல்களால் காசாவில் உள்ள 94% மருத்துவமனைகள் மற்றும் 90% பள்ளிகள் அழிக்கப்பட்டுள்ளன.

காசாவின் 2.3 மில்லியன் மக்கள்

## மண்சரிவில் சிக்கிய பேருந்து 18 பேர் உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவின் இமாச்சல பிரதேசத்தில் பேருந்தொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 18 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த பேருந்து 20 பயணிகளுடன் பயணித்துக்கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக மலைப்பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இதனையடுத்துச் சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக் குழுவினர் மண்ணுக்குள் சிக்கியவர்களை மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இருப்பினும் சம்பவத்தில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ளை அகற்றவே

# ள் ஆகும்

## க வெளியீடு





தொகையில் 90% பேர் வீடற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். பாதிக்கும் மேற்பட்ட மக்கள் கடுமையான பட்டினியை எதிர்கொள்கின்றனர். காசாவின் 80% பகுதி இராணுவ மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காசாவில், 1,500 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. போருக்கு முன் பயிரிடப்பட்ட நிலங்களில், தற்போது 232 ஏக்கர் மட்டுமே சாகுபடி செய்யக்கூடியதாக உள்ளது. அதாவது, வேளாண் நிலங்களில் 98.5% இப்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. வளமான மண் இல்லாதது உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. போருக்கு முன்பு காசா தனது மொத்த ஏற்றுமதியில் 32% ஸ்ட்ராபெர்ரிகள், 28% தக்காளி மற்றும் 15% வெள்ளரிகளை ஏற்றுமதி செய்து வந்தது.

இஸ்ரேலியத்தாக்குதல்கள் 83% நீர்ப்பாசனக் கிணறுகளை அடைத்துள்ளன. வெடிபொருட்கள் மற்றும் இரசாயனங்கள் காரணமாக காசாவின் மண்ணில் இரசாயன அளவு மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக இந்த போரினால் ஏற்பட்ட சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் பல தசாப்தங்களுக்கு நீடிக்கும் என்று ஐ.நா. அறிக்கையில் எச்சரித்துள்ளது. (நி)

ஆக
ால்
துவ
ிகள்
க்கள்
ற்பட்
கழ்ந்
இடத்
ினர்
ளை
மேற்
பேர்
இந்
. (நி)






# இயற்பியலுக்கான நோபல் பரிசு

## மூன்று விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்தளிப்பு



(சுவீடன்)

2025 ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவை சேர்ந்த விஞ்ஞானிகளான ஜான் கிளார்க், மைக்கேல் டெவோரெட் மற்றும் ஜான் மார்டினிஸ் ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார சர்க்யூட்களில் மைக்ரோஸ்கோபிக் குவாண்டம் மெக்கானிக்கல் டனல் மற்றும் ஆற்றல் அளவீட்டைக் கண்டுபிடித்ததற்காக அமெரிக்காவை சேர்ந்த ஜான் கிளார்க், மைக்கேல் எச்.டெவோரெட் மற்றும் ஜான் எம். மார்டினிஸ் ஆகியோருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்படும் என்று ராயல் ஸ்வீடிஷ் அகாடமி ஆஃப் சயின்சஸ் நேற்று முன்தினம் ஸ்டாக்ஹோமில் அறிவித்தது.

நூற்றாண்டு பழமையான குவாண்டம் இயக்கவியல் தொடர்ந்து புதிய ஆச்சரியங்களை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குவாண்டம் மெக்கானிக்ஸ் அனைத்து டிஜிற்றல் தொழில்நுட்பத்திற்கும் அடித்தளமாக இருப்பதால், இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நோபல் பரிசு குழுவின் தலைவர் ஓலே எரிக்சன் கருத்து தெரிவித்தார்.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியவர்களுக்கு விஞ்ஞானி ஆல்ஃபிரட் நோபல் நினைவாக ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 15 மனைவியர், 30 குழந்தைகளுடன் சுற்றுலா சென்ற மன்னர்

## ஸ்தம்பித்தது அபுதாபி விமான நிலையம்

(அபுதாபி)

தெற்கு ஆபிரிக்காவில் உள்ள எஸ்வாட்டினி நாட்டின் மன்னர் மூன்றாம் மஸ்வாட்டி, 15 மனைவியர், 30 குழந்தைகள், 100 வேலையாட்கள் என, 150 பேர் அடங்கிய பரிவாரங்களுடன் சென்றிறங்கியதால் அபுதாபி விமான நிலையம் ஸ்தம்பித்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.

தனி விமானத்தில் வந்திறங்கிய மன்னரை சுற்றியிருந்தவர்கள் மரியாதையாக வணங்கி, வீர வணக்கம் செலுத்தும் காட்சி க்ாண்போரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

ஆபிரிக்காவின் கடைசி முழு அதிகார மன்னராக விளங்கும் இவர், 1986 முதல் எஸ்வாட்டினியை ஆண்டு வருகிறார்.

தற்போது 57 வயதாகும் மன்னர் மஸ்வாட்டி அவரது நாட்டின் பாரம்பரிய புலித்தோல் உடையில் தோன்ற, அவரது 15 மனைவியர், 30 குழந்தைகள் வண்ணமயமான ஆபிரிக்க உடைகளில் அழகாக காணப்பட்டனர்.

பொருளாதார ஒப்பந்தம் தொடர்பான பேச்சு நடத்துவதற்காக, ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு அவர் வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.


இவரது தந்தை, முன்னாள் ஸ்வாசிலாந்து மன்னர், 125 மனைவியர் மற்றும் 210 குழந்தைகள், 1,000 பேரக்குழந்தைகளை கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

தற்போதைய மன்னர் மூன்றாம்மஸ்வாட்டிக்கு 30 மனைவியர் உள்ளனர். ஆனால் இந்த பயணத்தில், 15 மனைவியர் மட்டுமே உடன் வந்தனர். இவருக்கு, 35இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும், "ரீட் டான்ஸ்" எனும் பாரம்பரிய விழாவில் புதிய மனைவியை மன்னர் தேர்ந்தெடுக்கும் பழக்கம், உலகளவில் விமர்சனத்தையும் பெற்றுள்ளது.


மன்னர் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வர, எஸ்வாட்டினியில், 60 சதவீத மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்கின்றனர்.

நாட்டில் வறுமை மற்றும் பொருளாதார சவால்கள் இருக்கும் நிலையில், மன்னர் மஸ்வாட்டி உள்நாட்டிலும் விமர்சிக்கப்பட்டு வருகிறார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சந்தையில்
## அதிகரிக்கும் தங்கத்தின் விலை



(கொழும்பு)

24 கரட் தங்கம் பவுண் ஒன்றுக்கு 6000 ரூபாவால் அதிகரித்துள்ளதாக, நேற்று இலங்கை நகைக்கடை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், தற்போதைய தங்க விலை நிலவரப்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 320,000 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது.

22 கரட் தங்கம் பவுண் ஒன்று 296,000 ரூபாயாகவும், விற்பனை செய்யப்படுகிறது.

சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை முதல் முறையாக ஒரு அவுன்ஸ் 4,000 அமெரிக்க டொலரை தாண்டியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உலகின் பொருளாதார மற்றும் அரசியல் நிலை குறித்த கவலைகளுக்கு மத்தியில் முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடுகளைத் தேடுவதால், தங்கத்தின் விலை முதல் முறையாக இவ்வாறு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1994- இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>12இல் செவ்<br>கி-பா-. 40<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்: A/L, Canada<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16101 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்-உத்தரட்டாதி<br>12இல்செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Degree, DO<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/16102 |
| பிறப்பு:1998-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்-O/L, Driver<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16103 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்-பரணி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BIT, BBA, Senior Accounts Executive<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16105 |
| பிறப்பு:1999-இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: A/L Shop (London)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16104 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்-ரேவதி<br>கி.பா -12 1/2<br>உயரம்-5'2"<br>தகைமை/தொழில்: BIT, Software Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/16109 |
| பிறப்பு:. 1993-இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>8இல்சூரி செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: BSc, Supervisor<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16106 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>1இல்செவ்<br>கி.பா-22 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் - B.Pharm, Assistant Lecturer<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16111 |
| பிறப்பு: 1996- இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி-பா-16 1/4<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Medical Technician<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16107 | பிறப்பு-1985-இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - BSc, MSC, DO<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்,<br>தொ.இ: G/16116 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 454



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஆசையும் சினமும்!

இந்த உலகத்திலே மனிதன் எவ்வளவோ தவறுகள் செய்கிறான். அதற்கெல்லாம் என்ன காரணம்?

அதைப் பற்றிய ஆராய்ச்சிதான் இன்றைக்கு!

"இதற்கு ஆராய்ச்சி எதற்கு? அது தெரிந்த விடயம்தானே" என்று நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் அப்படி அல்ட்சியமாக இந்த விடயத்தை விட்டுவிடக் கூடாது!

பொதுவாக எல்லோரும் நினைக்கலாம்.

"எது சரி? எது தவறு? என்று தெரியாததினாலே மனிதன் தவறு செய்கிறான்" என்று! அப்படி சொல்லிவிட முடியாது!

மனிதன் தெரிந்தேதான் தவறுகள் செய்கிறான்.

இப்போது உதாரணத்திற்கு ஒரு சாலையிலே இடது பக்கமாக போக வேண்டிய ஒருவர் நடுக்கோட்டை தாண்டி வலது பக்கமாக வண்டியை ஓட்டிக்கொண்டுப் போகிறார். "என்னப்பா இது தவறு இல்லையா?" என்று அவரிடம் கேட்டால். "அதெல்லாம் எனக்குத் தெரியும். நீ உன் வேலையை பார்த்துக்கொண்டு போ!" என்கிறார். வலது பக்கமாக போவது தவறு என்று தெரிந்தேதான் அவர் அப்படி போகிறார். பெரிய உத்தியோகத்திலே இருக்கிறவர்கள் கூட "இலஞ்சம்" வாங்கிறார்கள்!

அவர்களுக்கெல்லாம் "இலஞ்சம்" வாங்கிறது தவறு என்று தெரியவில்லை என்றால் அர்த்தம்? திருடுவது தவறு என்று தெரியாமலா மனிதன் திருடுகிறான்? நல்லா தெரியும்.

நீங்கள் வேணும் என்றால் கேட்டுப் பாருங்கள்! "வேறு வழியில்லை. அதனாலே திருடுகிறேன் என்பான்! திருடுவது ஒரு புண்ணியமான காரியம் என்று திருடனே கூட சொல்லமாட்டான் "திருடுவது தவறு என்பது திருடனுக்குத் தெரியும்" என்பதை விளக்குவதற்காக ஒரு பெரியவர் ஒரு கதை சொன்னார்.

இரண்டு திருடர்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு வீட்டுக்குப் போய் 10,000 ரூபாயை திருடிக்கொண்டு வந்துவிடுகிறார்கள் ஒரு காட்டு வழியாக வந்தார்கள். இன்னும் விடியவில்லை ஆனால் இரண்டு பேருக்கும் தூக்கம் கண்ணை சுத்தியது!

"சரி. இப்படி ஒரு மரத்தடியிலே படுத்துத் தூங்குவோம்! காலையில் விடிந்ததும் இந்தப் பணத்தை இரண்டு பேரும் பங்கு போட்டுக் கொள்வோம்!" என்று முடிவு செய்தார்கள்! அதே மாதிரி படுத்து தூங்கிவிட்டார்கள்! நடுராத்திரியிலே ஒரு திருடன் முழிக்கிறான். விடியும் வரைக்கும் காத்துக்கொண்டிருந்தால் 5000தான் கிடைக்கும். இப்பவே கம்பி நீட்டினால் 10000 கிடைக்கும். யோசித்துப் பார்த்துவிட்டு ஒரு முடிவுக்கு வருகிறான்.

மெதுவாக அந்த 10,000த்தையும் சுருட்டிக்கொண்டு ஓடிப் போய் விடுகிறான் விடியுது"அடுத்தவன் எழுந்து பார்த்தான்! பணத்தையும் காணவில்லை! பாகஸ்தனையும் காணவில்லை! இந்த திருடன் அந்தத் திருடனை திட்டுகிறான்!

"திருட்டு பயல் அயோக்கியப் பயல்! இப்படி அநியாயமாக கிளப்பிக் கொண்டுப் போயிட்டானே! என்கிறான். "இதுலேயிருந்து என்ன தெரியுது? தெரியுமா எடுத்துக்கொண்டுப் போவது திருட்டு.

தெரிந்துதான் இருக்கு! அதனாலேதான் அடுத்தவனை பார்த்து இப்படி திட்டுறான் அதனாலே தெரியாமலே மனிதன் தவறு செய்கிறான் என்று சொல்வது சரி இல்லை அப்படி என்றால் மனிதன் செய்த தவறுக்கு காரணம் என்ன? இதே சந்தேகம் அர்ச்சுனனுக்கும் வந்தது.

அதனாலேதான் அவன் பகவானை பார்த்து கேட்கிறான். தன் விருப்பத்திற்கு விரோதமாக, ஏதோ ஒரு சக்தியினாலே, பலாத்காரமாக இழுக்கப்பட்டது மாதிரி பாவம் செய்கிறானே அந்த சக்தி என்ன? என்று கேட்கிறான் பகவான் பதில் சொல்கிறார்.


காமமும் குரோதமும் தான் அந்த சக்திகள் அதாவது ஆசையும் சினமும்! இது இரண்டும் உன்னுடைய எதிரிகள் என்பதை புரிந்துகொள் என்கிறார்.

இன்னமும் நுணுக்கமாக பார்த்தால் காமத்தினுடைய மறு உருவங்கள்தான் குரோதமும் லோபமும்! ஆசை நிறைவேறவில்லை என்றால் குரோதம் அதாவது கோபம்! நிறைவேறிச் சின்ன லோபம் அதாவது பேராசை! பாவத்தை கண்ட்ரோல் செய்யும் மெயின்ஸ்விட்ச் எது என்று இப்போதுதான் தெரிகிறது!


அதற்கு மனிதன் தெரிந்தேதான் தவறு செய்கிறான் என்று பேசிக்கொண்டோமே அதற்கு ஒரு உதாரணம். ஒரு ஆள் ஹோட்டலிலே சாப்பிடப் போனான். சாப்பிட்டு முடித்தான் எழுந்திரிந்து வந்து முதலாளியிடம் பில்லைக் கொடுத்தான் காசு கொடுக்கவில்லை! முதலாளி "பணம் கொடு" என்று கேட்டார். இவன் "என்னிடம் பணம் இல்லை!" என்றான். முதலாளி கொஞ்சம்கூட அலட்டிக்கவில்லை! உள்ளேயிருந்து ஒரு ஆளைக் கூப்பிட்டார்.

இவனைக் கூப்பிட்டுக்கொண்டுப் போய் இட்லி மா ஆட்டச் சொல்லு!" என்றார். இவனும் கவலைப்படாமல் உள்ளே போனான். அப்போது அழைத்துக்கொண்டுப் போகின்ற நபர் கேட்டான். "ஏன் சார் சாப்பிடுவதற்கு முன்னாடி இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றான் "தெரியும்... காசு இல்லை என்பதும் தெரியும்! காசில்லாமே சாப்பிட்டால் மாவாட்டனும் என்பதும் தெரியும்!" என்றார். இவர். "அப்படி என்றால் நீங்கள் உங்கள் வீட்டுலேயே சாப்பிட்டிருக்கலாமே" என்றான். அதுக்கு இவர்... "அது எப்படி? அங்கே சாப்பிட்டாலும் நான் இதே வேலையை செய்ய வேண்டி இருக்குமே!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வடமராட்சி, துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கொடியிறக்கத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

# மன்னார் மாவட்ட மருத்துவமனையில் பரிசோதனை நிலையங்கள் திறப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் விசேட குழுவினர் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுப் புதன்கிழமை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இதன் போது வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட வைத்திய பரிசோதனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து விசேட கூட்டம் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்திக்குழு பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மன்னார் பொது வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர், உதவி பிராந்திய சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் வடமாகாண ஆளுநருடன் வட மாகாண பிரதம செயலாளர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோரும் வருகை தந்திருந்தனர். இதன் போது வைத்திய சாலையில் உள்ள பல்வேறு குறைபாடுகள் குறித்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்களால் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

குறிப்பாக வைத்தியசாலையில் உள்ள அதிகமான கட்டடங்கள் பழமை வாய்ந்த கட்டடங்களாக உள்ளமையினால் அவற்றை மாற்றி அமைத்தல் மற்றும் நவீன வசதிகளை ஏற்படுத்துதல், உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

மேலும் நோயாளிகள் எதிர் கொள்ளும் அசௌகரியங்கள், அதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இதன் போது இந்திய அரசின் நிதி உதவியுடன் வைத்தியசாலையில் அமைக்கப்படவுள்ள கட்டடம் குறித்தும் ஆளுநர் வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

மேலும் மாகாண நிதியில் இருந்து திட்டம் ஒன்றை வகுத்து 2026 ஆம் ஆண்டுக்கான நிதியில் இருந்து 3 மாடி கட்டடம் ஒன்றை அமைக்க நிதி ஒதுக்கவும் கலந்துரையாடப்பட்டது. மேலும் அடுத்த வருட நிதியில் இருந்து சீ.டி.ஸ்.கேன் இயந்திரம் ஒன்றையும், சில உபகரணங்களையும் கொள்வனவு செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் வைத்தியர்களுக்கான விடுதி, வைத்தியசாலைக்கான ஆளணி உள்ளிட்ட சில பிரச்சினைகள் குறித்து ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் குறித்த பிரச்சினைகளுக்கு துரித நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள அனைத்து பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்போம் என வடமாகாண ஆளுநர் தெரிவித்தார். (8-285)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 350 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 350 |
| தக்காளி | 200 | 200 | 250 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 300 | 200 |
| கோவா | 180 | 180 | 200 | 200 |
| கரட் | 150 | 250 | 300 | 250 |
| பூசணி | 60 | 60 | 100 | 60 |
| புடோல் | 120 | 250 | 150 | 300 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 150 | 150 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 500 |
| வெண்டக்காய் | 150 | 250 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 300 |
| லீக்ஸ் | 200 | 240 | 250 | 250 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 160 |
| கறிமிளகாய் | 300 | 450 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 200 |
| போஞ்சி | 450 | 500 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 300 | 180 |
| கீரை - 1 பிடி | 140 | 80-140 | 150 | 100 |
| தேசிக்காய் | 1500 | 1300 | 1000 | 2400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 1000 | 1000 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 240 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 250 |

# இராசிபலன்

09.10.2025,
புரட்டாதி 23 , வியாழக்கிழமை
திருதியை பின்னிரவு 3.09 மணிவரை

பரணி பின்னிரவு 12.38 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை

சந்திராஷ்டமம்-
அத்தம்,சித்திரை.

வளவன்

**மேஷம்** குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** நண்பர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**துலாம்** கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், உறவினர் நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அக்கறை காட்ட முற்படுவர்.

**மிதுனம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி** கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், உறவினர் நண்பர்களிடம் விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, பிரயாண பயமுண்டு, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**தனுசு** உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

விட்டுக்கொடுத்து வாழ்வதே இயற்கையின் விதி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 881





வெகு நேரம் கழித்து அத்தாதிப் பெண் திரும்பி வந்தாள். ரவிதாஸன் எழுந்து முன்னால் போனான். அவள் கொண்டு வந்திருந்த சோற்று மூட்டையையும், சாவிக் கொத்தையும் வாங்கிக் கொண்டான். பிறகு, வஸந்த மண்டபத்தை அடைந்து அங்கிருந்த பொக்கிஷ நிலவறைக்குச் சென்ற நடைபாதையில் இருவரும் சென்றார்கள். ஒரு சாவி, இரண்டு சாவி, மூன்றாவது சாவியையும் போட்டுத் திருப்பிய பிறகு, பூட்டுத் திறந்தது. நிலவறையின் உள்ளே ஒரே கும்மிருட்டாக இருந்தது.

ரவிதாஸன் தாதிப் பெண்ணைப் பார்த்து, "அடடா! ஒன்று மறந்து விட்டேனே! இந்த இருட்டறையில் விளக்கு இல்லாமல் எப்படி போவது? ஒரு விளக்காவது தீவர்த்தியாவது கொண்டு வா!" என்றான்.

"பட்டப்பகலில் தீவர்த்தியும், விளக்கும் எப்படிக் கொண்டு வருவேன்? யாராவது பார்த்துச் சந்தேகப்பட்டால்?"

"அது எனக்குத் தெரியாது! உனக்கு அவ்வளவு சாமர்த்தியம் இல்லை என்றா சொல்கிறாய்? நான் நம்ப மாட்டேன். தீவர்த்தியாவது தீபமாவது கொண்டு வா! இல்லாவிடில் இராத்திரி பன்னிரண்டு கொள்ளிவாய்ப் பிசாசுகளை அனுப்பி"

"ஐயையோ, சும்மா இரு! எப்படியாவது கொண்டு வந்து தொலைக்கிறேன்" என்று கூறினாள் அந்தத் தாதிப் பெண்.

"அதற்குள் நானும் சாப்பிட்டு முடிக்கிறேன்" என்றான் ரவிதாஸன்.

தோழிப் பெண் அரண்மனையை நோக்கிச் சென்ற பிறகு ரவிதாஸனும் சோற்று மூட்டையுடன் தோட்டத்துக்குள் பிரவேசித்தான் சோமன் சாம்பவனிடம் வந்தான். அவனிடம் சோற்று மூட்டையைக் கொடுத்து, "ஒருவேளை இரண்டு மூன்று நாள் நிலவறையிலேயே நீ இருக்கும்படி நேரலாம். சரியான சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் அல்லவா? ஆகையால் இந்தச் சோற்று மூட்டையை வைத்துக் கொள். வேலை எடுத்துக் கொண்டு என்னோடு சத்தமிடாமல் வா! அந்தப் பெண் தீவர்த்தி கொண்டு வரப் போயிருக்கிறாள். அதற்குள் நீ நிலவறைக்குள் புகுந்து விட வேண்டும்" என்று சொன்னான். இருவரும் துரிதமாகச் சென்றார்கள் மந்தாகினியும் அவர்கள் அறியாமல் பின் தொடர்ந்தாள்.

## 28ஆம் அத்தியாயம்
## பாதாளப் பாதை

நாற்புறமும் நன்றாகப் பார்த்துவிட்டு ரவிதாஸன் திறந்திருந்த நிலவறைக் கதவைச் சுட்டிக் காட்டிச் சோமன் சாம்பவனை அதன் உள்ளே போகச் சொன்னான்.

"முதலில் இருட்டில் கண் தெரியாது அதற்காகக் கதவின் அருகிலேயே நின்று விடாதே! உள்ளே கொஞ்சம் தூரமாகவே போய் நின்றுகொள்!" என்றான்.

சோமன் சாம்பவன் நிலவறைக்குள் புகுந்ததும் அவனை இருள் விழுங்கிவிட்டது போலிருந்தது. பிறகு, ரவிதாஸன் நடைபாதை வழியாகத் திரும்பி நந்தினிதேவியின் வஸந்த மண்டபம் வரையில் சென்றான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஆணிவேர்



மேடம்!என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். தான் ஒரு மணமகள் என்பதைக்கூட யாமினி மறந்து என் வகுப்பறையில் நான் அவளைக் கூப்பிட்டபோது ஓடி வந்த அதே சிறுமி போல் ஓடிவந்தாள்.

மேடம்... சாப்பிட்டு உடனே போய் விடாதீர்கள் . இதோ வந்து விடுகின்றேன்.மீண்டும் மேடைக்கு ஓடினாள்.

என்னிடம் படித்த மாணவிகளில் இவள் தான் இன்றுவரை என்னை ஞாபகம் வைத்திருந்து தன் திருமணத்துக்கும் அழைத்திருந்தாள்.

சாப்பிடுவதற்காக உள்ளே சென்றேன். கலர் ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட வாழை இலை. பரிமாறும் ஆட்களில் யாருமே சொந்தக்காரர்கள் இல்லை. எல்லோரும் வெள்ளை சீருடையில் இருந்த [illegible]ட்ராக்ட் ஆட்கள்தான். முன்பெல்லாம் திருமணங்களில் ஒரு சித்தப்பாவோ, மாமாவோ, பந்தியில் நின்று கவனித்துக் கொண்டிருப்பார்கள். அதையெல்லாம் இப்போது பார்க்க முடியவில்லை. எதிர்பார்க்கவும் முடியவில்லை. ரொம்பவும் கூட்டமாக இருந்ததால் மீண்டும் ஹாலுக்கு வந்தேன்.

யாமினி நல்ல புத்திசாலிப்பெண். விளையாட்டு, பொது அறிவு என்று எல்லாவற்றிலும் ஆர்வமுள்ளவள். ஒரு முறை சர்தார் வல்லபாய் பட்டேலிடம், ஒரு ஆங்கிலேயர் கேட்ட கேள்வியையும், அவர் சொன்ன பதிலையும் சொல்லிக் கொண்டிருந்தேன்.

"What is your culture?.

"Agriculture..."

இதைக் கேட்ட யாமினி ஆர்வத்துடன், மேடம் நான் ஒரு கவிதை எழுதிருயிருக்கின்றேன் சொல்லட்டுமா?..."

"உயிரை உருவாக்கும் தாய்மண்ணின் கருவறைக்குள், கட்டுமானக் கம்பிகளையும், கல்லையும் திணிக்கும் இந்த சமூகத்தில், இருக்கும் ஓரிரு உழவனும் நிலங்களை, மனைகளாக்கிச் சென்று விட்டால், பிறகு எந்த செங்கல்லையும் மணலையும் தின்று ஜீரணிப்பதோ தெரியவில்லை..."

யாமினி விவசாயக் குடும்பம் கொஞ்சம் விளைநிலங்களுக்குச் சொந்தக்காரர். இவர்களைப் போல் சிலராவது இன்னும் விவசாயத்தை விடாமல் செய்து வருவது ரொம்பவே சந்தோஷத்தைத் தருவதாக இருந்தது.மறுபடியும் யாமினி மேடையிலிருந்து என் அருகில் வந்து உட்கார்ந்தாள்.

அப்புறம் யாமினி... மாப்பிளை என்ன சொல்றாரு?அவர் என்ன சொல்றாரு?... அவங்கம்மா அப்பாதான் சொல்லிக்கிட்டே இருக்காங்க. அது வாங்கிடுங்க, இது வாங்கிடுங்க என்று எங்கப்பாவும் இந்த வரனை விட்டுவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் கேட்டதெல்லாம் கொடுத்துக்கொண்டேயிருந்தார்கள். நான் தெரியாமல்தான் கேட்கின்றேன். மாப்பிளைக்கும் அதே செவ்வாய் தோஷம் இருக்குத் தானே பெண் வீட்டில் மட்டும்தான் அனுசரிச்சுப் போகணுமா? நாளைக்கு உனக்கு ஒரு பெண் பிறந்து, பெற்றவர்கள் ஸ்தானத்தில் இருக்கும் போது தெரியும்.

இல்லை. எதை வேணாலும் பொறுத்துக்கலாம். அவர்கள் வீடு கேட்கின்றார்கள் என்பதற்காக இருந்த நிலத்தில் முக்காவாசிய வித்து வீடு வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள் இப்படியே ஆளாளுக்கு ஒரு விவசாயத்தை விட்டுட்டிருந்தால், அப்புறம் என்னதான் மேடம் ஆகுறது?

உணர்ச்சியுடன் தன் ஆதங்கத்தைச் சொல்லிக் கொண்டிருந்த யாமினிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் யோசித்தேன். மீண்டும் அவள் அக்கா அழைக்க, யாமினி ஓடினாள். வல்லபாய் பட்டேல் சொன்னதையும் யாமினி சொன்னதையும் நினைத்துப் பார்க்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயத்தோடு மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டால், தனது மரியாதை தானே உயரும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றுகூடி பேரணி நடத்த வேண்டும்

அரச நியமனம் அல்லது அரச அங்கீகாரம் பெற்றுவிட்டால் போதும் தொழிற்சங்கம் என்ற பெயரில் அவரவர் தத்தம் வேலையைக் காட்டத் தொடங்கிவிடுவர்.

பரவாயில்லை, அவரவர் தத்தம் உரிமைக்காகப் போராடுவது ஏற்புடையது. அதேநேரம் அரச திணைக்களங்கள் மற்றும் சுவட்டுத்தாபனங்கள், சபைகளின் சேவைகளை சரியாகப் பெற முடியாதபோது அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் உரிமை மீறப்படுகிறது.

இங்குதான் குறித்த திணைக்களத்துக்கு அல்லது அமைப்புக்கு எதிராகப் பொதுமக்கள் குரல் கொடுக்க வேண்டும்.

ஆம், ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் தொழிற்சங்கம் எங்கள் வடபுலத்துக்குள் நுழைந்து, கல்வி நிர்வாகத்தை துவம்சம் செய்தது.

தமிழ் மக்களின் கல்வியை வீழ்த்துகின்ற நோக்கத்துடன் வட புலத்துக்குள் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்துக்குள் நுழைந்த அந்த ஆசிரியர் தொழிற்சங்கம் எங்கள் கல்வி மட்டத்தை கடைசி நிலைக்குக் கொண்டு வந்த பின்பு இந்தப் பக்கம் தலைகாட்டுவதே இல்லை.

இப்படியான நிலைமைகள் பொதுமக்களைப் பாதிப்பதாக உள்ளன.

உண்மையில், எங்கள் கல்விப் பெறுபேற்றின் வீழ்ச்சிக்குப் பொறுப்புக்கூறுங்கள். அவ்வாறானதொரு நிலைமை இனிமேல் ஏற்படாது என உத்தரவாதம் தாருங்கள் எனப் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் அதைச் செய்யாத காரணத்தால், எல்லாம் அம்போ என்றாயிற்று. ஆக, அனைத்து விடயங்களிலும் பொதுமக்கள் சார்ந்த பயனாளிகள் தங்களின் உரிமைக்காகப் போராட வேண்டும்.

உதாரணத்துக்கு நேற்று முன்தினம் (7) வடமாகாண சட்டத்தரணிகள் ஒரு நாள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

சட்டத்தரணி ஒருவரின் வீட்டுக்கு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விதிமுறைகளை மீறிச் சென்றுள்ளதாகக் குற்றம் சுமத்தி, குறித்த பணிப்புறக்கணிப்பு நடத்தப்பட்டது.

நல்லது. சட்டத்தரணிகள் தங்களின் உரிமைக்காக குரல் கொடுத்துள்ளனர்.

இங்கு நாம் கூறவருவது; கள்ள உறுதி மூலம் காணிகளைப் பறிகொடுத்த பொது மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து

**கள்ள உறுதி எழுதாதே... எழுதாதே... எங்களுக்கொரு சட்டம் உங்களுக்கொரு சட்டமா?**

**கைது செய்... கைது செய்...**

இப்படிக் கோசம் எழுப்பி பேரணியாகச் சென்று ஜனாதிபதி, பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், நீதிச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணத்திலுள்ள அத்தனை நீதிபரிபாலனங்கள், மனித உரிமை ஆணைக்குழு என அனைவருக்கும் மகஜர்கள் கொடுத்தால் அந்த மகஜரில், மோசடி செய்த – செய்கின்ற சட்டத்தரணிகளின் பெயர்ப்பட்டியல் மற்றும் அவர்கள் மீது இருக்கக்கூடிய நீதிமன்ற வழக்குகள் என அனைத்தையும் சான்றாதாரப்படுத்தினால் எல்லாம் சுமுகமாகும்.

இதைச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட பொதுமக்களும் ஏனையவர்களும் முன்வர வேண்டும்.

# மாகாண சபைத் தேர்தலில் நாட்டமில்லா அரசாங்கம் தமிழர்களை ஏமாற்றுகிறது

## நாமல் எம்.பி திடீர் கருசனை

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு 13 ஆவது சீர்திருத்தத்தை வழங்குவோம் என்று வாக்குறுதியளித்த அநுர அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலைக்கூட நடத்தத் தயங்குவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

போரை முடிவுக்குக் கொண்டு வந்து வடக்கிலும் மாகாணசபைத் தேர்தலை மஹிந்த ராஜபக்ஷ நடத்தி இருந்தார்.

ஆனால் அவருக்குப் பிறகு வந்த ஜனாதிபதிகளால் மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாமல் உள்ளது.

அதிகாரத்துக்காக கொள்கையைக் கைவிடும் கட்சி அல்ல எமது கட்சி. தேர்தலில் வென்றாலும் தோற்றாலும் கொள்கைகளை கைவிட்டது கிடையாது. சில கட்சிகள் தேர்தல் வெற்றிக்காக தமது கொள்கையை மாற்றுகின்றன.

அதேபோல பொய்களையும் கூறுகின்றன. இப்படியான கட்சிகளுக்கு அழிவு நிச்சயம்.

செய்யக்கூடிய விடயங்களை மட்டுமே எமது கட்சி கூறிவருகின்றது. 13ஆவது திருத்தத்தைத் தருகின்றோம். அதைத் தருகின்றோம். இதைத் தருகின்றோம் என எம்மாலும் கூறி இருக்க முடியும்.

ஆனால் நாங்கள் மக்களை ஏமாற்ற விரும்பவில்லை. 13ஆவது திருத்தத்தைத் தருவோம் என்றுகூறியவர்களால் மாகாண சபைத் தேர்தலைக் கூட நடத்த இயலவில்லை என்றார். (ம-7)

## அரியாலையில் திண்மக் கழிவுகளை

## தரம்பிரிக்கும் நிலையமே உள்ளது குப்பைகளைக் கொட்டும் இடமல்ல

### தவிசாளர் மயூரன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் குப்பைகளைக் கொட்டும் இடத்தை நல்லூர் பிரதேசசபை அமைத்துள்ளதாக அரசியல்காழ்புணர்ச்சி காரணமாக வெளியான பொய்யான தகவல்களால் மக்கள் பிழையாக வழி நடத்தப்பட்டுள்ளதாக நல்லூர்ப் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையம் அரியாலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக நேற்று அரியாலைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு வருகை தந்திருந்த தவிசாளர் மயூரன் சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், நல்லூர் பிரதேச சபையின் திண்மக் கழிவுகளை சேகரிக்கும் முகமாக அரியாலைப் பகுதியில் சகல அனுமதிகளைப் பெற்றே பிரதேச சபை செயலாளரால் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கூட இந்த இடத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இது குப்பைகளைக் கொட்டும் இடமில்லை. தரம் பிரிக்கும் இடம். இந்த மக்களை சிலர் குப்பைகளைக் கொட்டும் இடம் எனக் கூறி குழப்பியுள்ளனர்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பொய்யான தகவல்களை வழங்கி மக்களைப் பிழையாக வழி நடத்துகின்றனர்.

வடமாகாண ஆளுநரிடம் திண்மக் கழிவகற்றலுக்குப் பொருத்தமான திட்டத்தினைத் தீட்டுமாறு கோரி உள்ளோம். அவ்வாறான திட்டங்கள் நடைமுறைக்கு வந்தால் இந்த இடத்தினை நாம் தொழில் பேட்டையாக மாற்றி அமைப்போம்.

இதொரு சுற்றுலாதளம் என்கின்றார்கள். ஆனால் இது ஊருக்கு ஒதுக்குப் புறமாகவுள்ள மயானத்திற்கு அருகிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

திண்மக் கழிவுகளை அகற்ற வேறு இடங்கள் எமக்கு கிடைக்கப்பெற்றால் இந்த இடத்தினை தொழில் பேட்டையாக மாற்றி அமைப்போம் என உறுதி அளிக்கிறோம் எனத் தெரிவித்தார். (ம-7,33)

## பேராசிரியர் சண்முகதாசுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

(யாழ்ப்பாணம்)

வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவருமாகிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விருதானது நாளை வெள்ளிக்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ள கிழக்கு மாகாண பண்பாட்டு விழாவின்போது கிழக்கு மாகாண ஆளுநரினால் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு ஏலமிடப்பட்ட குழந்தை

(பாண்டிருப்பு)

பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தில் குழந்தை ஒன்று ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்ட சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குழந்தைகளை ஆலயங்களுக்கு நேர்ந்து விற்று வாங்கும் வழக்கம் காலா காலமாக தமிழர் மரபியல் பின்பற்றப்பட்டு வருகின்றது.

இதனால் குழந்தைகள் நோய் நொடிகள் இன்றி சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்வர் என்பது ஐதீகம்.

அந்த வகையில் பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தில் குறித்த சம்பவமானது பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இராணுவத்தின் சலூனை உடன் மூடுமாறு அறிவிப்பு

### கரைத்துரைப்பற்று பிரதேசசபை அதிரடி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாபிலவில் வனத்துறையினருக்குச் சொந்தமான காணியில் இராணுவத்தினரால் நடத்தப்படும் குளிரூட்டப்பட்ட சிகை அலங்கார நிலையத்தின் செயற்பாடுகளை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்துமாறு கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

குறித்த சிகை அலங்கார நிலையமானது போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் முன்னேற்றத்துக்கும் சுயதொழில் முயற்சியாளரின் வாழ்வாதாரத்துக்கும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய குறித்த தீர்மானம் எட்டப்பட்டதாக கரைத்துறைப்பற்றுப் பிரதேசசபையின் தவிசாளர் லோகேஸ்வரன் தெரிவித்துள்ளதோடு அதனை மீறி இயங்க முற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

19

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

எங்கெங்கு முஸ்லிம்கள் வாழ்ந்தனரோ, அங்கெல்லாம் கலகங்கள் மூண்டன. கொழும்பில், கொள்ளையடித்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடந்தன. பொலிஸார் பொதுவாக சிங்களருக்கு உடந்தையாக இருந்னரேயன்றி, கலகத்தை அடக்க அதிகம் முயற்சி எடுக்க வில்லை.

ஜூன் 2 இல் கலகம் பற்றிய செய்திகள் நுவரெலியாவிலிருந்த ஆளுநர் ஷாமேர்ஸூக்கு எட்டவே, அவர் உடனடியாகக் கண்டிக்கு விரைந்து சென்றார், உத்தியோக பூர்வமாக மறுத்தாலும், அவர், அக் கலகத்தை அரசாங்கத்தை கவிழ்க்க கையாளப்பட்ட சதியென்றே முடிவு செய்தார். ஜேர்மன் ஒற்றர்கள், இலங்கையில் பௌத்த பிக்குகளின் காவி உடைகளைத் தரித்து வாழ்ந்தார்களென்றும், அவர்கள் பிரித்தானியர் ஆட்சியை முறியடிக்கத் திட்டமிட்டு வந்தார்களென்றும் கூறப்பட்ட கதையும், எம்டன் என்ற ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பல் இந்திய சமுத்திரத்தில் காணப்பட்ட உண்மையும், ஆளுநரின் மதியை மறைக்கச் செய்தன. அதே தினம் அவர், படையாட்சியைப் பிரகடனம் செய்து, ஆட்சி யதிகாரத்தை இராணுவத்தினர் கையில் ஒப்படைத்தார்.

இராணுவத்தினர், கலகத்தை முறியடிப்பதற்கு மிகவும் கொடூரமான அடக்கு முறைகளைக் கையாண்டனர். நாலா பக்கங்களிலும் ஆண்களும் பெண்களும் கைது செய்யப்பட்டனர். குடியியல் இராணுவச் சட்டங்களை மீறினோர் உடனடியாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். துப்பாக்கி அல்லது அபாயகரமான ஆயுதங்களை வைத்திருப்பவர்களுக்கும் அதே கதி உண்டாயிற்று. படைமன்றுகள், தேசத் துரோகம் எனும் போர்வையின் கீழ், பலரை கொலை தண்டனைக்குத் தீர்த்தன. இவ்விதமாக 63 குற்றமற்றவர்களை படைமன்றுகள் கொலைக்குத் தீர்த்தன எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

சிங்களவரின் மனதில் பயங்கரத்தை ஏற்படுத்தும் நோக்கமாக மூன்று மாதங்களுக்கு படையாட்சி நிலவிற்று. சிங்களப் பிரமுகர்கள் பலர், கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டதுமன்றி, அவர்களின் இல்லங்களும் பரிசோதிக்கப்பட்டன.

அமைதி நிலைகள் மீண்டும் எழவே, 1915 செப்ரெம்பர் 25 இல் கொழும்பில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஒரு செயற்குழு நியமிக்கப்பட்டு, அஃது அரசாங்கத்தினதும் இராணுவத்தினரதும் அட்டூழியங்களைப்பற்றி தயாரித்த விஞ்ஞாபனம், நவம்பர் 25 இல் குடியேற்றக் காரியதரிசிக்கு அனுப்பப் பெற்றது.

அவர், உடனடியாகச் சிங்களப் பிரமுகர்களையும் படைமன்றங்களினால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களையும் விடுதலை செய்தார்.

இக்கலகத்தில் இராணுவப் படையினர் நடந்து கொண்ட முறையினையும், அவர்களால் நீதி நியாயமின்றி சுட்டுக் கொல்லப்பட்ட கொலைகளையும் விசாரிப்பதற்கென அவர் ஒரு விசாரணைச் சபையையும் நியமித்தார்.

விசாரணைச் [illegible] ஒளிப்பு மறைப்பின்றி பழியை அதிகாரிகளின் மேலும் இராணுவப் படைகளின் மேலும் சுமத்தியது. இதன் விளைவாக ஆளுநர் ஷாமேர்ஸ் திருப்பியழைக்கப்பட்டு, அவரிடமாக சேர். ஜோன் அன்டர்சன், சிங்களவருக்கு விளைவிக்கப்பட்ட அநீதிகளுக்கு பரிகாரம் செய்ய வேண்டுமென்ற கட்டளையுடன் புது ஆளுநராக அனுப்பப்பட்டார்.

இந்நிலையில் சேர். பொன் இராமநாதன் இங்கிலாந்து சென்று, கலகத்தின் விபரங்களை மேலரசுக்கு எடுத்துரைத்தார். திரு. E. W. பெரேரா "இராணுவச் சட்டக் காலத்தில் இலங்கை முழுவதும் ஒரு இழவு வீடு போல் இருள் அடைந்திருந்த போது சேர். பொன். இராமநாதன் அவர்கள், சுவாலை விட்டெரியும் சுடர் போன்று கோபாவேசத்துடன் சீறியெழுந்து இந்த அக்கிரமங்களைத் தடுத்து நிறுத்தவும், மீண்டும் சாதாரண நிலைமைகளை ஏற்படுத்தவும் இயன்றவற்றையெல்லாம் செய்தார்" எனக் கூறினர்.

1915 ஆம் ஆண்டு முஸ்லிம் கலகங்களில், ஆங்கிலேயர் கலகத்தை அடக்குவதற்குக் கையாண்ட நடவடிக்கைகள், தேசியவுணர்ச்சி உச்சக் கட்டத்தைத் தொட உதவின.

அவர்களது மிருகத்தனமான செயல்கள் மீண்டும் நிகழாதிருப்பதற்கு, தம் நாட்டு ஆட்சியில் கூடுதலான பங்கு பெறுவது இன்றியமையாதது என்பதை பல இலங்கையர் உணரத் தொடங்கினர். இக் கட்டத்தில் தான் சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் அரசியலுலகில் [illegible]

**இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாக்கம்**

1908ஆம் ஆண்டு வரையில் இலங்கைக்கு அரசியற் சீர்திருத்தங்கள் வேண்டும் என்று இடைவிடாது கிளர்ச்சி செய்தவர்கள் ஐரோப்பியர்களே. ஆனால் இலங்கை அரசியல் அரங்கத்திலே இலங்கையர் தோற்றியதும் இந்த ஐரோப்பியர் தம் பழைய கருமங்களை விடுத்து சீர்திருத்தங்கள் வேண்டியதே இல்லை என்று கூறத் தொடங்கினர்.

இது குறிக்கத்தக்க ஓர் விடயமாகும். இலங்கையர் அரசியல் அதிகாரம் பெற்றால் தாம் இதுவரை ஏகபோகமாகக் கொண்டிருந்த அதிகாரமும் செல்வாக்கும் மிகக் குறைந்துவிடும் என்பதை அவர்கள் ஏற்கெனவே அறிந்தனர். எனவே உள்ள உள்ளவாறே பரிபாலன முறை இருக்கவேண்டும் என்று அதன் பொருட்டுத் தம்மாலான மட்டும் பாடு பட்டனர். அத்துடன் தமது அரசியல் அந் தஸ்தைப் பாதிக்கக் கூடிய அரசியல் மாற்றங்களை அவர்கள் தீவிரமாக எதிர்த்தனர்.

சேர். பொன் அருணாசலம் அவர்கள், 33 ஆண்டுகளாக அரசாங்க சேவையில் அமர்ந்து மிகத்திறமையுடன் சேவையாற்றி 1913 இல் இளைப்பாறினர். அவர் அரசாங்க சேவையில் ஆற்றிய சேவைக்குக்கைம்மாறாக ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் பக்கிங்காம் அரண்மனையில் அவருக்கு "நைட்" பட்டத்தை வழங்கினார்.

அருணாசலம் அவர்கள் தமது பிற்கால வாழ்க்கையைத் தேச சேவையிலேயே செலவிட முற்பட்டார். அரசாங்க சேவைக் கட்டுப்பாடுகளினின்று விடுதலை பெற்ற அவர், தம் ஒப்பற்ற சக்திகளையெல்லாம் நாட்டிற்கே அர்ப்பணம் செய்தார்.

சுயாட்சி பெறும் நோக்கத்துடன் 1917 ஆம் ஆண்டு மே மாதம், இலங்கைச் சீர்திருத்தச் சங்கமொன்றினை அருணாசலம் அவர்கள் நிறுவினர்கள். அத்துடன் 1917 டிசம்பரிலும், 1918 டிசம்பரிலும் முறையே இரு அரசியல் மாநாடுகளை அவர் ஒழுங்கு செய்தார். அடுத்த மாதங்களில் அருணாசலம் நடாத்திய விரிவுரைகள், பிரசுரித்த கட்டுரைகள் என்பவற்றின் வழியாக இலங்கையின் அரசியல் விடுதலைக்காகப் போராடும் ஆர்வத்தை நாட்டு மக்களிடையே தட்டியெழுப்பினர்.

இந்நாட்டுக்காக சேவை புரிவதற்கு இலங்கையிலுள்ள சகலரையும் அறைகூவி வரவழைத்தார். அவர் பொதுமக்களுக்கு அரசியல் அறிவை ஊட்டவும், மிதவாதிகள், பழைமையைப் பேணுவோர், தீவிரவாதிகள் ஆகிய எல்லாச் சக்திகளையும் ஒன்று கூட்டுவதற்கும், அரசியற் திட்டத்தில் ஒரு நியாயமான சீர்திருத்தத்துக்கான ஆகக் குறைந்த கோரிக்கையின் பேரில் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கும், ஒரு பொதுச் சபை இன்றியமையாததென உணர்ந்தார்.

அருணாசலம் அவர்களின் பூர்வாங்க வேலைகளின் பயனாக 1919 டிசம்பர் 11 ஆம் திகதி இலங்கைத் தேசிய காங்கிரஸ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அருணாசலம் அவர்களே காங்கிரஸ்க்கு முதலாவது தலைவராக ஏகமன தாகத் தெரிவு செய்யப்பட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னாலைக்...

விளானில் இருந்து பலாலி வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, புன்னாலைக்கட்டுவன், ஆயக்கடவை பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் ஹன்டருடன் மோதி விபத்து ஏற்பட்ட நிலையில் படுகாயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கணவன் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (07) மாலை உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வடக்கு - கிழக்கு...

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது இருதரப்புக்கும் இடையே முக்கியமான விடயங்கள் குறித்து கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இலங்கையின் அண்மைய அரசியல் மாற்றங்கள் மற்றும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து உயர்ஸ்தானிகரும் எம்.ஏ.சுமந்திரனும் விரிவாகக் கலந்துரையாடினர்.

விசேடமாக தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் மற்றும் எதிர்கால நகர்வுகள் தொடர்பில் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்திய உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் உயர்ஸ்தானிகர் கேட்டறிந்தார்.

இந்தியா நிதியளிக்கும் வீடமைப்புத் திட்டங்கள், அகதிகள் மீள்குடியேற்றம் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள், கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் ஏனைய சமூக மேம்பாட்டுத் துறைகளில் இந்தியா வழங்கும் உதவிகள் குறித்தும், வடக்கு மற்றும் கிழக்கில் சமூக-பொருளாதார மேம்பாட்டுக்கான இந்தியாவின் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாட்டில்...

மக்கள் தொகையில் இரண்டு சதவீதத்தினர் கடுமையான மன நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

உலக மனநல தினத்தை முன்னிட்டு நேற்று நடைபெற்ற தேசிய நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (ம-7)

## இலங்கை...

பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைப் பொறிமுறை தொடர்பில் சுவிஸர்லாந்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழர்கள் மீது குற்றம் புரிந்தவர்கள், இனப்படுகொலை செய்தவர்கள் சிங்கள ஆட்சியாளர்களே.

ஆக, தற்போதைய அரசாங்கமாக இருந்தாலும் சரி, இனிவரும் அரசாங்கங்களாக இருந்தாலும் சரி தமிழ் மக்களின் நிலைமையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்தும் குரல் கொடுத்து நீதியைப் பெறுவதற்கான முயற்சிகளைப் புலம்பெயர் தமிழர்கள், தமிழ்நாட்டிலுள்ள தமிழ் அமைப்புக்கள், ஈழத்திலே இருக்கக்கூடிய தேசிய அமைப்புகள் இணைந்து ஒரு புள்ளியாக மேற்கொண்டால் மாத்திரமே இதற்கான ஒரு வெற்றியை அடைய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் வாக்குப் பலத்துடன் கூடிய சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பும் இதற்கு அவசியம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். (ம-7)

## பட்டம் பெறும்...

மருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று (08) பாராளுமன்ற விவாதத்தின்போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

கல்வியியற் கல்லூரிகள் நீண்ட காலமாக மறுசீரமைக்கப்படவில்லை. வளங்கள் மட்டுமல்ல. அவை செயற்படுத்தப்படும் விதமும் அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

தற்போதைய காலத்திற்கு ஏற்றதாகவும், உத்தேச கல்வி சீர்திருத்தங்களுக்கு ஏற்பவும் ஒரு பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும். எமக்குத் தேவையான ஆசிரியர்களை உருவாக்க நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதற்காக, கல்வியியற் கல்லூரிகளில் உள்ள ஆசிரிய மாணவர்களும் ஆசியர் கலாசாலைகளில் உள்ள ஆசிரியர்களும் பயிற்சி பெறுகின்றனர்.

அனைத்து ஆசிரியர்களும் பட்டதாரிகளாக வேண்டும் என்ற நிலைக்கு படிப்படியாக வருவதே எமது அரசாங்கத்தின் குறிக்கோள். கல்வியியற் கல்லூரிகளில் பட்டம் வழங்கப்படும் நிலைக்கு அதைக்கொண்டு வர விரும்புகிறோம்.

குளியாப்பிட்டி கல்வியியற் கல்லூரியில் ஏற்கனவே பட்டங்கள் வழங்கப்படுகிறது. அதே போன்று மீதமுள்ள 19 கல்வியியற் கல்லூரிகளும் அந்த நிலைக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கூறியுள்ளார். (ம-7)

## அரி...

காலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு சில நிமிடங்களில், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் போராட்ட இடத்திற்கு வரவேண்டும் என்று கூறி வீதியை வழிமறித்ததால் போக்குவரத்துத் தடைப்பட்டது.

அதனை அடுத்து. நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. மயூரன் போராட்ட இடத்திற்கு வருகை தந்திருந்தார். அதன்போது தவிசாளரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பின்னர் போராட்டக்காரர்கள் பேரணியாகச் சென்று ஆளுநர் செயலகத்தில் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

நல்லூர் பிரதேச சபை, எமது ஊர் மக்களுடன் எந்தவகையிலும் கலந்து பேசாது சூழலை மாசுபடுத்தக் கூடிய குப்பைகளை எமது ஊரில் வீசும் திட்டத்தை ஆரம்பித்திருப்பது எமது ஊர்மக்களால் மட்டுமல்ல இயற்கையையும் மனிதத்தையும் நேசிக்கும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநீதியாகும் என்றனர். (ம-7,33,104)


மஹஜன சம்பத — திகதி 2025.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் 5976 — Y 1 5 4 3 7 7
அத சம்பத — Y 4 3 7 7 — சீட்டிழுப்பு இலக்கம் 551

சுப தவசக் — திகதி 2025.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் 0082 — கன்னி 08 09 24 29

தன நிதானய — திகதி - 2025.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் - 2006 — J 01 04 59 67 J

மெகா பவர் — திகதி 08/10/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2324 — D 24 03 10 60 73

ஜய — திகதி 2025.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் 0244 — V 2 6 0 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4218 — சீட்டிழுப்பு திகதி 08.10.2025 — P 13 17 47 74 — P

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் 1285 — மேடம் 05 12 40 61 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 08.10.2025 — வெற்றி வாரம் 0684 — E — 6 4 1 3 0 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,948,969.20

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2950 — சீட்டிழுப்பு திகதி 2025.10.08 — தினம் புதன்கிழமை — 08 51 53 69 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,662,043.20

சனிதா — திகதி 08.10.2025 — வெற்றி வாரம் 5111 — 13 29 53 70 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,217,037.60

ஜயோதா Jayoda — திகதி 2025.10.08 — வெற்றி வாரம் 2168 — 12 17 27 52 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 32,104,152.80

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4662 — சீட்டிழுப்பு திகதி 08.10.2025 — தினம் புதன்கிழமை — 02 05 11 15 சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,800,967.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — K 37 07 08 10 58 — 2126 — 08.10.2025 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.598,837,617.00

அத கோட்டிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம்: 2776 — சீட்டிழுப்பு திகதி: 2025.10.08 — 03 33 52 70 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,907,072.80


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TECHNO WORLD**
A/L தொழில்நுட்பப் பிரிவு
10 வது வருடத்தில் தடம் பதிக்கின்றது
**விசேட செயலமர்வு**
**11,12,13 October 2025**
பொறியியல்
தொழில்நுட்பவியல்
"காலை 9.00 மணிமுதல்
பிற்பகல் 3.15 மணிவரை"
வெலிங்டன் சந்தி,
(லிங்கம் கூல்பார்
அருகாமை)
யாழ்ப்பாணம். தொடர்புகளுக்கு : 077 017 5346
(C-4061)



**காணி விற்பனைக்கு**
யாழ். நகரில் இருந்து
3Km தூரத்தில் ஆறுகால்
மடத்தில் சுற்றுமதிலுடன்
கூடிய 2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு :
**071 700 8954**
(C-4067)



**உடனடி வேலைவாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
(ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- முதல் 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
**V2 TRAVELS** 076 1410725 / 076 8226236
v2vacancies@gmail.com
(C-4065)


## முறைப்பாடுகளை...

நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்,வலிந்து காணாமலாக்கப் பட்டவர்கள் தொடர்பான அலுவலகத் துக்கு வழங்கப்பட்ட 16,966 முறைப் பாடுகளில் 23 பேர் மாத்திரமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடு களின் குழு வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காணாமல்போன வர்கள் குறித்த விரிவான ஆவணங் கள் இல்லாதது மற்றும் அவர்களின் இருப்பிடத்தை தெளிவுபடுத்துவதிலு ள்ள மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றம் குறித்து குழு கவலை கொண்டுள்ளது.

காணாமல் போனவர்கள் தொடர் பான அலுவலகத்தை வலுப்படுத் தவும், காணாமல் போனவர்க ளைத் தேடுவதற் கும், காணாமல் போனதாகக் கூறப்படும் சம்ப வங்களை விசா ரிப்பதற்கும், இலங்கையில் காணாமல் போன வர்களின் விரிவான மற்றும் புதுப்பித்த பதிவேட்டை ஒருங்கிணைக் கவும் குழு அழைப்பு விடுத்துள்ளது.

நாட்டில் 17 மனிதப் புதைகுழிகள் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட் டதையும் குழு தனது அவதானத்தில் கொண்டுள்ளது.

மேலும், அடையாளம் காணப்பட்ட உடல்கள் மற்றும் மனித எச்சங்களை அவர்களின் குடும்பங்களுக்கு கண் ணியமான முறையில் உறுதிப்படுத்த, பாதுகாக்க, அனைத்துத் திறமையான அதிகாரிகள் மூலம் அரசாங்கம் தடய வியல் திறனை உருவாக்க வேண்டும் என குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (5615)
076 825 7716 (ஆகாஸ்)



**கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலயம்**

இத்திருக் கோயிலுக்குரிய திருத்தேர் தற்போது அமைப் பெற்று வருவதால் தேர் கொட்டகையும் அதனோடு அமையும் தேர் முட்டியும் அமைய திருவருள் கூடியுள்ளதால் அதற்குரிய ஒப்பந்தத் தொகைகள் ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து கோரப்படு கிறது.

விபரங்களை தேவஸ்தானத்தில் பெற்று தங்கள் ஒப்பந்தத் தொகை விபரங்களை இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கவும்.

உபயகாரர்,
மகேஸ்வரி
கனகரட்ணம்
(5612)

ஆலய பிரதம குரு,
ந.ஸ்ரீ.ரங்கநாதகுருக்கள்.
074 099 7916



A/L - 2025 மாணவர்களுக்கான...
**N.BABU** ஆசிரியரின்
**புவியியல் கருத்தரங்கு**
> ஒக்ரோபர் - 11, 12, 13, 14 ஆம் திகதிகளில்
> ஆரம்பம் - 11.10.2025 சனி 11 a.m
> வெளி மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
DMI ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
T.P : 077 936 5087



**காணி விற்பனைக்கு**
இணுவில் கிழக்குப் பூவோடைப் பகுதியில்
பன்னிரண்டு பரப்புக் காணியும், குப்பிளான்
இராஜேஸ்வரி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்
ஆறரைப் பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.
**077 844 8796**
(C-4063)



**யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்**
**இந்தியன் செலக்ஷனின்**
தீபாவளி தினம் வரையான
**தீபாவளி**
**மெகா சேல்!**
அனைத்து விதமான ஆடைத் தெரிவுகள்

சாறிகள், சல்வார்கள்,
சல்வார் துணிகள், கவுண்,
பாட்டி புறொக், டொப்,
ஸ்கேட், ப்ளவுஸ், லேடிஸ்
ஜீன்ஸ், லெஹங்கா, சேட்,
ரீ சேட், கொட்டன் ஜீன்ஸ்,
டெனிம் ஜீன்ஸ், பெற்சீற்,
துவாய் போன்றவைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.
(1630)
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம் : 29-09-2025 முதல் தீபாவளி தினம் வரை
(வாரத்தின் 07 நாட்களும் வியாபாரம் நடைபெறும்)


**4ம் ஆண்டு நினைவஞ்சலி**



**பற்றிக் றோஸ்மலர்**

ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறாத எம் துயரம் மாறாத நினைவுடனே
வாழ்கின்றோம் உம் நினைவு அலைகளினால்
நீடூழி வாழ்வீர் என நினைவுகளில்
உற்றுநாமும் நியமதினில் வாழ்ந்திடவே
நீண்ட தூரம் சென்றதேனோ அம்மா!
வாழ்வின் உயர்வுக்காய், உதிரத்தை
ஈகையாக்கி எமை நிறைவுற வழிசமைத்தவரே
உதிரத்தை உணவாக்கி உயிர்காத்த எம் பொருளே...

*நீங்கா நினைவுகளுடன்...*
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்**
(C-4068)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 121, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.